# சிந்தனைப் புரட்சியின் விதைகளில் இருந்து புரட்சியின் செம்மஞ்சள் நிறப்பயிர் செழித்து எழட்டும்

(துணிச்சல் உள்ளவர்கள் மஹாப்புரட்சியின் தீப்பொறியை நெருப்பாக்கி, நெருப்பைக் காட்டுத் தீயாக்குவதில் உதவுங்கள்)

யுகமாற்றத்திற்கு மிகப்பெரிய செயலைச் செய்ய வேண்டி இருக்கும், ஆனால் இந்தச் செயலை வேலைக்காரர்களை வைத்துச் செய்ய முடியாது. இந்தச் செயல் உணர்வுபூர்வமானது, தியாகிகள் செய்ய வேண்டியது. உண்மையானவர்கள், உழைப்பாளிகள் என்று சொல்லக்கூடிய அத்தகைய உணர்வு உடையவர்கள் நமக்குத் தேவைப்படுகிறார்கள். உழைப்பாளிகள் உண்மையானவர்களாக இருப்பதில்லை. உண்மையானவர்கள் உழைப்பாளிகளாக இருப்பதில்லை. உண்மையானவர்களாக உள்ளவர்களுக்கு மிஷனைப் பற்றித் தெரிவதில்லை. நமக்கு நேரம் மிகவும் குறைவாக உள்ளது. நமக்கு ஆட்கள் தேவைப்படுகிறார்கள். நீங்களும் அவர்களில் ஒருவராகச் சேர விரும்பினால், வாருங்கள் அன்போடு வரவேற்கிறோம். நீங்கள் எந்த வேலை செய்து கொண்டிருந்தாலும், அந்த வேலையை விட இது மிக உயர்ந்த வேலை என்று உங்களுக்கு நம்பிக்கையாக உறுதி அளிக்கிறோம். இதைவிடச் சிறந்த செயல் வேறு எதுவும் இருக்க முடியாது. நாம் இதைச் செய்திருக்கிறோம், ஆகையால் இது மிகவும் லாபம் தரக்கூடிய செயல் என்று உங்களுக்கு உறுதி அளிக்க முடியும்.

நம்முடைய செயல் திட்டத்தை எல்லா இடங்களிலும் விஸ்தரிக்க நமக்கு உங்களுடைய உதவி தேவைப்படுகிறது. நமக்கு தேச நிர்மாணத்தில் பங்கு பெறக்கூடியவர்கள் தேவைப்படுகிறார்கள். புதியவர்களிடம், புதிய இடங்களில் செல்வதற்கு நமக்கு உதவுங்கள்.

என்ன வேலை செய்வது? நாம் மிக அருமையான பவானி அம்மனின் கத்தியை எடுத்து இருக்கிறோம். இப்படிப்பட்ட அருமையான திட்டம் உலகில் இதுவரை ஏற்படுத்தப்படவில்லை. என்ன திட்டம்? நாம் ஒவ்வொரு நாளும் படித்தவர்களைத் தவறாது, இலவசமாக, யுகப் புரட்சிப் புத்தகங்களைப் படிக்கும்படிச் செய்ய வேண்டும் என்பதே அந்தத் திட்டம். நீங்கள் படித்த மக்களிடம் நம்முடைய குரலைக் கொண்டு சேருங்கள். நம்முடைய உள்ளக் கொதிப்பை, நம்முடைய சிந்தனைத் தீப்பொறிகளை, அவர்களிடம் சேர்ப்பியுங்கள்.

மக்களிடம் குருஜி பெரிய ஸித்த புருஷர், பெரிய மஹாத்மா, எல்லோருக்கும் வரம் தருபவர், என்றெல்லாம் சொல்லாதீர்கள். மாறாக, எவர் வயிற்றிலிருந்து நெருப்பு கிளம்புகிறதோ, எவர் கண்களில் இருந்து

அருவி பொழிகின்றதோ, அந்த மனிதரின் பெயர் குருஜி என்று சொல்லுங்கள். நீங்கள் ஸித்த புருஷரை அல்ல, இப்படிப்பட்ட குருஜியை அறிமுகம் செய்யுங்கள்.

நம்முடைய கருத்துக்களைப் படியுங்கள், நமது ஞானத்திட்டத்தில் யுக இலக்கியங்களாக எழுதப்பட்டுள்ள நெருப்பின் தீப்பொறிகளை மக்களிடையே பரப்புங்கள். வாழ்க்கையின் உண்மையின் ஸித்தாந்தத்தை உணருங்கள், கனவுலகத்திலிருந்து எழுங்கள், கொடுக்கல்–வாங்கல் உலகத்திற்கு வாருங்கள்.

உங்களுக்கு அருகாமையில் இருக்கும் எல்லா மனிதர்களிடத்திலும் நமது கருத்துக்களைப் பரப்புங்கள். நம்மை முன்னேறச் செய்யுங்கள். தொடர்பை ஏற்படுத்திக் கொள்ள வழி செய்யுங்கள். நமக்கு உதவுங்கள், நாம் அந்த சிந்தனையாளர்களிடம், படித்தவர்களிடம் செல்வதற்கு ஏதுவாக இருக்கும். இதுகூட இல்லாமல் நமதுவேலை நடக்காது. நமக்கும் மகிழ்ச்சியும் ஏற்படாது.

நண்பர்களே! நமது சிந்தனைகளை, மக்கள் படிக்கச் செய்யுங்கள். நமது கருத்துக்களைப் படிப்பவரே நமது சீடர். நமது கருத்துக்கள் மிகவும் நுண்ணியவை, தீக்ஷண்யமானவை, ஆவேசமானவை. நமது முழு சக்தியும் நமது கருத்துக்களில் அடங்கியுள்ளன. உலகத்தைப் புரட்ட நாம் எடுத்துக் கொண்டுள்ள சவாலை, சித்திகளால் அல்ல, நமது வலிமையான கருத்துக்களால் எதிர் கொண்டு முடிக்கிறோம். இந்த கருத்துக்களைப் பரப்புவதில் நமக்கு உதவி செய்யுங்கள்.

பிரபஞ்ச ப்ரக்ஞையின் அறிவிப்பு பத்துத் திசைகளிலும் முழங்குகிறது. அதனுடைய சிவப்பின் பிரதிபலிப்பு ஆகாயத்தின் எல்லாப் பகுதிகளிலும் குறிப்பாக ஒளிர்கிறது. எவருடைய பாஞ்சஜன்யம் முழங்குகின்றது என்பது தெரியவில்லை என்றாலும் ஒரே ஒலி எதிரொலிக்கிறது. மாற்றம்! மாற்றம்!! மாற்றம்!!! உன்னத மாற்றம் முழுமையான மாற்றமே. வரும் காலத்தின் இயற்கையும், விதியும் இதுவேயாகும். மனிதர்களில் எவரிடம் மனிதத்தன்மை உயிருடன் உள்ளதோ, அவர்களும் இவ்வாறே நினைப்பார்கள். செய்வார்கள்.

ஷாந்திகுஞ்ச், யுகநிர்மாணத் திட்டத்தின் மூலம் யுக இலக்கியங்கள் இப்போது வெளியிடப்படுகின்றன! அவற்றின் விலை, காகிதம் மற்றும் அச்சிடும் செலவு, இந்த அளவே வைக்கப்பட்டுள்ளன. அவை அனைத்திற்கும் எந்தவிதமான எழுத்துரிமையும் ஏற்படுத்தப்படவில்லை, எவர் வேண்டுமானாலும் அச்சடித்துக்

கொள்ளலாம்.

எப்படி ஸ்வரண குமார் தனது தாய்-தந்தையை எல்லாத் தீர்த்தங்களுக்கும் யாத்திரை அழைத்துச் சென்றாரோ, அப்படியே நீங்களும் எங்களை (கருத்துக்களின் வடிவில்) உலகத்தின் எல்லாத் தீர்த்தங்களுக்கும், ஒவ்வொரு கிராமத்திற்கும், ஒவ்வொரு வீட்டிற்கும் எடுத்துச் செல்லுங்கள். நம்முடைய இச்சிந்தனைப் புரட்சியின் விதை வரும் நாட்களில் பெருத்த ஒலியோடு வெடிக்கும். நீங்கள் நமது பணியைச் செய்யுங்கள். நாம் உமது பணியைச் செய்வோம்.

புரட்சியின் விதை ஒரு பெரும் சிந்தனைச் சிற்பியன் புத்தியில் பிறக்கிறது. அங்கிருந்து பூவாகிக், காயாகி, கனியாகி, புரட்சி தர்மத்தின் இலக்கிய வடிவில் வெளிவருகிறது. தொற்று நோய் போல மற்ற புத்திகளில் புதிய கருத்தாகப் பரவுகிறது. வரிசை தொடர்கிறது. புரட்சியின் ஆர்வம் எனும் வெள்ளம் பாய்ந்து வருகிறது. மூலை முடுக்கெல்லாம் புரட்சியின் தருணம் கொண்டாடப்படுகிறது. தீப்பொறியில் இருந்து நெருப்பும், நெருப்பில் இருந்து காட்டுத் தீயும் ஏற்பட்டு விடுகின்றன. எல்லாத் தரப்பு மக்களும் பாகுபாடு இல்லாமல் அதன் தாக்கத்திற்கு ஆட்படுகின்றர். சேறும், சகதியும் நிறைந்த இடங்களில் கூட தீப்பிடிக்கிறது.

அத்தருணத்தில் விதியையும் கட்டுப்படுத்தும் கண்ணுக்குத் தெரியாத சக்தி, மாற்றத்தின் புரட்சி எழுச்சியால் நிரம்பிய மெய் உணர்வாகப் பரிணமிக்கறது. பீரங்கிகளின் முழக்கம், போர்வீரர்களின் நடையின் இடியோசை, மிகப்பெரும் ஆட்சியாளர்களின் வீழ்ச்சி, பிரபஞ்சம் முழுவதும் வியாபித்த குழப்பம், கூச்சல் நிறைந்த புரட்சியின் திருவிழா, எல்லையற்ற அழிவு, மற்றும் பலம் நிறைந்த புதிய படைப்பின் வெள்ளம், இவற்றைக் கொண்டு வருகிறது. புரட்சியின் அந்தத் தருணத்தில் உலகம் அதை உருவாக்கக்கூடிய வாணலியில் இடப்பட்டு, புதியவடிவம், புதிய உருவம் பெற்று வெளிவர இருக்கிறது. பெரும் புரட்சியின் அந்த நேரத்தில் இப்படிப் பல நடக்க இருக்கின்றன. இவற்றைக் காணும் போது அறிவாளிகளின் அறிவு குழம்பிப் போகப் போகிறது. மேதாவிகளின் ஞானம் கேலிக்கிடமாக போகப் போகிறது.

இன்றைய காலகட்டத்தில் சிந்தனைப் புரட்சியின் விதைகளின் வியப்பூட்டும் தாக்கத்தால் புரட்சியின் செம்மஞ்சள் நிறப்பயிர் செழித்து வளர்ச்சியடையும் மாற்றத்தின் ஜ்வாலைகள் கொழுந்து விட்டு எழும். புரட்சியின் பெருந்தணத்தின் ஆர்வத்தின் நாட்டியம் எல்லாப் பக்கங்களிலும் பரவும். இது அந்தப் பெரும் விநாடி, விஷ்வமாதா தனது பிள்ளைகளின் கணக்கற்ற காயங்களைத் தாங்கிக் கொண்டு,

தாளா வேதனையுடனும், கண்களில் கண்ணீருடனும், தனது புதிய படைப்புக்குத் தயாராவாள்.

தொடர்புடைய சேகரிப்புகள் :

1) அகண்ட ஜ்யோதி, நவம்பர் 1994- பக்கம் எண். 43.

2) ஸமஸ்யாயே ஆஜ் கீ, ஸமாதான் கல் கே-ப.எண். 28,

3) ஷிக்ஷா ஹீ நஹீ வித்யா பீ - ப.எண். 10.

4) வாங்மய-ஷிக்ஷா ஏவம் வித்யா - ப.எ.5,35.

5) அகண்ட ஜ்யோதி, அக்டோபர் 1997 - ப.எண். 28.

6) அகண்டஜ்யோதி, கிராந்தி விசேஷாங்க் செப்டம்பர் 1997 ப.எண்.1.

7) ப்ரக்ஞா அபியான் (பாக்ஷிக) 1 பிப்ரவரி 1998.


அகில உலக காயத்ரி பரிவார்

ஷாந்திகுஞ்ஜ், ஹரித்வார் (உத்தரகாண்ட்) 249 411.

செல் : **+91 92583 60651**

இ-மெயில் : south@awgp.in வெப்சைட் : www.awgp.org



**"அஸ்வமேத காயத்ரி மஹா யாகம்"**

**உங்களை அன்புடன் வரவேற்கிறது**

**2016 ஜனவரி 28 முதல் 31 வரை**

**இடம் : விவேகானந்தா கேந்திரம், கன்னியாகுமரி, தமிழ்நாடு, தென்னிந்தியா**

இ-மெயில் : gck.kanyakumari@awgp.in (கோ ஆர்டினேட்டர்)

**GAYATRI PARIWAR TAMILNADU CENTERS**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Chennai | : | 9003149639, 9962929214 | Nagercoil | : | 8939353511, 9362823000, 9442365447, LL : 04652-230447 |
| Coimbatore | : | 9442334658, 9629868215 | | | |
| Erode | : | 9443340509, 9962101366 | Salem | : | 9443697145, 9345763347 |
| Jolarpet | : | 9443151947, 9443556702 | Tambaram | : | 9789081148, 9789883921 |
| Kanchipuram | : | 8939353511, 9444914836 | Tirupur | : | 9789402824, 9994218924 |
| Madurai | : | 944290000, 9344100600 | Tuticorin | : | 8903516632 |
| Marthandam | : | 9443145332, 9443148688 | Tirunelveli | : | 9894947517, 9952052410 |

